பக்கங்கள்: நான்கு

Registered as a Newsparper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஸ்ரீ மாசி ௴ 4 உ. சனிக்கிழமை (16-02-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 81

★ முன் நிபந்தனைகளுடன்

# குவைத்தில் இருந்து விலக ஈராக் தயார்!

## புரட்சிக் கவுன்சில் அறிவிப்பு வளைகுடாவில் திடீர் திருப்பம்

லண்டன், பெப்ரவரி 16

சில முன் நிபந்தனைகளுடன் குவைத்திலிருந்து விலக ஈராக் இணங்கியிருக்கிறது. இதுபற்றிய அறிவிப்பை ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசேனின் தலைமையிலான ஆளும் புரட்சிக் கவுன்ஸில் நேற்று திடீரென வெளியிட்டது. இந்த அறிவிப்பினால் வளைகுடாப் போரில் புதிய திருப்பம் ஏற்பட்டிருப்பதாக சர்வதேச அரசியல் அவதானிகள் தெரிவித்திருக்கின்றனர்.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் 2 ஆம் திகதி குவைத் மீது ஈராக் படையெடுத்தது.

அதன் பின்னர் இப்போது தான் முதல் தடவையாக குவைத்தில் இருந்து வெளியேறத் தயாராக இருப்பதாக ஈராக் அறிவித்திருக்கிறது.

இதற்கு முன்னர் ஈராக்கின் பிரிக்க முடியாத ஒரு பகுதி குவைத் என்று ஜனாதிபதி சதாம் ஹுசேன் வலியுறுத்தி வந்தார்.

ஆளும் புரட்சிக் கவுன்ஸில்

(2ஆம் பக்கம் பார்க்க)

## அரந்தலாவையில் தாக்குதல்; 8 சிப்பாய்கள் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப்: 16

நேற்றுக் காலை 9.45 மணியளவில் அம்பாறை மாவட்டம் அரந்தலாவைப் பகுதியில் விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து நடத்திய அதிரடித் தாக்குதலொன்றில் எட்டு இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்றும் —

பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரந்தலாவை முகாமிலிருந்து மகாஓயா முகாமுக்கு கால்நடையாகச் சென்ற சிப்பாய்கள் மீது அரந்தலாவை முகாமிலிருந்து அறுநூறு யார்

(2ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் மோதல்கள் 6 படையினர் மரணம்

கொழும்பு, பெப்: 16

வவுனியா முல்லைத்தீவு ஆகிய இரு மாவட்டங்களிலும் ஐந்தாவது நாளாக தொடர்ந்து நடந்த மோதல்களில் 6 ஆயுதப்படையினர் கொல்லப்பட்டனர். 15 படையினர் படுகாயமடைந்தனர் என்று நேற்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

இப் பகுதிகளில் நேற்றும் கடும் சண்டை நடந்ததாக மற்றொரு செய்தி தெரிவிக்கிறது. (ஒ-எ)

## முல்லைத்தீவில் பொம்மர் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், பெப்: 16

முல்லைத்தீவில் நேற்றும் பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

மூன்றாம் வாய்க்கால் பகுதியில் குண்டு வீச்சினால் பெரும் சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் சேதவிவரங்கள் பற்றித் தூர்ஜிதமான தகவல்கள் ஏதும் உடனடியாகக் கிடைக்கவில்லை. (ஒ-15)

## முச்சந்தி முரளி



அங்கை பீப்பாவுக்கு இரண்டு டொலர் குறைஞ்சால் இங்கை [illegible] கப் பட்டினம்......!

## அமெ., பிரிட்டன் நிராகரிப்பு

நிபந்தனையற்ற முறையில் குவைத்தில் இருந்து ஈராக் தனது படைகளை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்காவும் பிரிட்டனும் கோரியுள்ளன.

அமெரிக்க வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கையில், "படை விலகல் பற்றி ஈராக் விடுத்துள்ள அறிவிப்பு ஏற்றுக்கொள்ளப்பட முடியாத அம்சங்களைக் கொண்டுள்ளன" — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் பிரதமர் மேஜரும் ஈராக்கின் அறிவிப்பை நிராகரித்துள்ளார்.

## பன்னாட்டுப் படையினரின் தாக்குதல்கள் தொடருமாம்

ஈராக்கின் திடீர் அறிவிப்பு காரணமாக பன்னாட்டுப் படையினர் தற்போது நடத்தி வரும் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்படமாட்டா என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

திட்டமிட்டபடி போர் விமானங்களின் வான் தாக்குதல்கள் தொடரும் என்றும் வெள்ளைமாளிகை அறிவித்தது.

வெறும் வானொலி அறிக்கைகளை வைத்து பன்னாட்டுப் படைகள் செயற்படமாட்டா என்றும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

## ஈராக் அதிகாரிகள் ஆறுதல்; மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம்

படை வாபஸ் பற்றிய ஈராக்கிய புரட்சிக் கவுன்ஸிலின் அறிக்கை பக்தாதில் உள்ள அமெரிக்க சி. என். என். டெலிவிஷன் செய்தியாளரிடம் ஈராக் அரச அதிகாரிகளால் கையளிக்கப்பட்டது.

இத்தகவலைத் தெரிவித்த அச்செய்தியாளர், அந்த அதிகாரிகள் தங்களுக்குள் கைகளைக் குலுக்கிக் கொண்டு பெரிய ஆறுதல் அடைந்தவர்கள் போல் காணப்பட்டனர் என்றும் கூறினார்.

சிறிது நேரத்தில் பக்தாத் நகரில் வேட்டுச் சத்தங்கள் கேட்டன என்றும் — மக்கள் மகிழ்ச்சியில் துப்பாக்கிகளால் ஆகாயத்தை நோக்கிச் சுட்டு ஆரவாரம் செய்கிறார்களெனத் தான் எண்ணியதாகவும் அச்செய்தியாளர் மேலும் குறிப்பிட்டார்.

ஆகாயத் தாக்குதலை எச்சரிக்கும் ஸைரன் ஒலிகளும் அடிக்கடி நகரில் கேட்டன என்றும், அவை கூட மக்கள் மகிழ்ச்சியில் செய்தவையாக தெரிந்தன என்றும் அச்செய்தியாளர் சொன்னார்.

## பல தரப்புக் கருத்து

ஈராக்கின் அறிவிப்புத் தொடர்பாக பல்வேறு நாடுகளும், அவற்றின் தலைவர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

"ஈராக்கின் அறிவிப்பில் புதிதாக எதுவுமில்லை. ஏற்கனவே ஈராக் கூறியதையே திரும்பிக் கூறுகிறது." — என்று கருத்து வெளியிட்டார் அமெரிக்க ஜனாதிபதி புஷ்.

"ஈராக்கின் நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை" என்றார் பிரிட்டிஷ் பிரதமர் மேஜர்.

இதற்கிடையில் ஈராக்கின் அறிவிப்பை சாதகமான செய்தியாக சோவியத் யூனியன் வரவேற்றிருக்கிறது.

ஈராக் அறிவிப்பு திருப்தியையும், நம்பிக்கையையும் தருவதாக சோவியத் அதிபர் கோர்பச்சேவின் சார்பில் அவருடன் நெருங்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

"அறிவிப்பு தெளிவு தருவதாக இல்லை" என்று நேட்டோ நாடுகள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

(2ஆம் பக்கம் பார்க்க)

## எண்ணெய் விலை வீழ்ந்தது

ஈராக்கின் திடீர் அறிவிப்பு காரணமாக லண்டன் சந்தையில் மசகு எண்ணெயின் விலை ஒரு பீப்பாய்க்கு இரண்டு டொலர்களால் வீழ்ச்சி அடைந்தது.

## இதுவரை 10 ஆயிரம் பேர் ஈராக்கில் உயிரிழப்பு

வளைகுடாப் போர் ஆரம்பித்ததில் இருந்து பன்னாட்டுப் போர் விமானங்கள் நடத்திய தாக்குதலினால் இதுவரை குறைந்தது பத்தாயிரம் பொதுமக்கள் ஈராக்கில் உயிரிழந்துள்ளனர்.

ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு ஈராக்கிய தூதர் இத்தகவலைத் தெரிவித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயாளரை இருவர் பார்வையிட அனுமதி

## விரைவில் அமுலுக்கு வரும்

யாழ்ப்பாணம், ஜன. 16
யாழ். ஆஸ்பத்திரியில் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு தற்போது ஒழுங்கிடு உள்ள முறையில் மாற்றம் கொண்டுவரப்படவுள்ளது. அதன்படி ஒரு நோயாளரை ஒரே சமயத்தில் இருவர் பார்வையிட அனுமதி வழங்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்பத்திரியின் பாதுகாப்பை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பொறுப்பேற்றதைத் தொடர்ந்து, அங்கு நோயாளர்களைப் பார்வையிட அனுமதிப் பதில் புதிய நடைமுறை கொண்டு வரப்பட்டது.

அதன்படி ஒரு நோயாளியை ஒரே சமயத்தில் ஒருவர் மட்டுமே பார்வையிட அனுமதிக்கப்பட்டு வந்தது. இதற்கெனப் புதிய 'பாஸ்' முறை ஒன்றும் கொண்டுவரப்பட்டது தெரிந்ததே.

இதனால் பொதுமக்களுக்குப் பெரும் சிரமங்கள் ஏற்பட்டது. அதுபற்றி முறையிடப்பட்டதைத் தொடர்ந்தே மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (ஒ 5)

# சிறுதானிய செய்கைக்கு வங்கி கடன் வழங்கும்

யாழ். மாவட்டத்தில் அவசர கால — இடைப்போக — சிறுதானிய விவசாய முயற்சியில் ஈடுபடுவோருக்கு கடன் வழங்க இலங்கை வங்கி முன் வந்துள்ளது.

வங்கியின் கிளைகளில் இந்தக் கடன் சம்பந்தமான விண்ணப்பப் படிவங்களைப் பெற்று கமநல சேவை நிலையங்களின் பெரும்போக உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

விவசாயம் மேற்கொள்ளும் காணியின் விஸ்தீரணத்தைப் பொறுத்தே கடன் தொகை அமையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று, மக்கள் வங்கியும் விவசாய முயற்சியில் ஈடுபடும் ப. நோ. கூ. சங்கங்களுக்கு கடன் வழங்க முன்வந்துள்ளது. (ஒ-3)

# வல்லைக்கு அதிகாரிகள் குழு

யாழ்ப்பாணம், பெப் 16
வல்வெட்டித்துறையில் கடந்த மாதம் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சினால் ஏற்பட்ட அழிவுகள், இழப்புகளை நேரில் கண்டறிய சகல திணைக்களங்களையும் சேர்ந்த உயரதிகாரிகள் குழு ஒன்று இன்று அங்கு விஜயம் செய்கிறது.

அங்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்யும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் சிரமதானம் மூலம் இடிபாடுகளை அகற்றுவது சம்பந்தமாகவும் மேற்படி குழுவினர் நடவடிக்கைகளை மேற்கொள்வர் எனத் தெரியவருகிறது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அ. டிவகலாலா தலைமையில் உயரதிகாரிகள் அடங்கிய குழு அங்கு செல்கிறது. (அ-5)

# அடையாளகார்ட் விண்ணப்பம் யாழ். செயலகத்தில் தேக்கம்

யாழ்ப்பாணம், பெப் 16
யாழ். செயலகத்தின் ஆட்பதிவுத் திணைக்களப் பிரிவில் அடையாள கார்ட்டுகளுக்கான ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் தேங்கியுள்ளன.

இந்தப் பிரிவில் கடமையாற்றிய அதிகாரிகள் சிலர் ஓய்வு பெற்றதை அடுத்தே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

அதே சமயம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட வேண்டிய நூற்றுக்கணக்கான தேசிய அடையாளக் கார்ட்டுகள் கொழும்புத் தலைமை அலுவலகத்தில் தேங்கிக்கிடக்கின்றன.

இவற்றை எடுத்து வருவதில் உரிய அதிகாரிகள் எவரும் கவனம் செலுத்துவதாக தெரியவில்லை எனவும் கூறப்படுகிறது. (இ-76-5)

# அரந்தலாவையில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
தூரத்தில் வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதல் நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் தெரியவந்தது.

பின்வரும் ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன:-

★ ஏ. கே. எல் எம் ஜி. — 1, அதற்குரிய றம் மகஸீன் — 1, லிங் — 100

★ ரி 56 — 1, அதற்குரிய மகஸின் — 4

★ எஸ். எல். ஆர். — 2, மகஸின் — 5

★ ரி 84 — 1, மகஸின் — 4

★ ரிபீற்றர் — 1, சன்னம் — 15

★ வாக்கி டோக்கி — 1

★ ஐ. எம். ரவைகள் — 150

★ றேட்டோ ரவைகள் — 120

★ 5.56 ரவைகள் — 100

இதனிடையில் இந்தத் தாக்குதலில் ஆறு பொலீஸார் உயிரிழந்ததாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

# வல்லையில் ஹெலி தாக்கு

யாழ்ப்பாணம், பெப். 16
யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த பயணிகள் வான் மீது நேற்றுக்காலை 10 மணியளவில் வல்லை வெளியில் வைத்து ஹெலி தாக்குதல் நடத்தியது.

வானில் வந்தவர்கள் பாய்ந்து பற்றைகளுக்குள் பதுங்கித் தப்பிக்கொண்டனர். வான் சேதமடைந்தது. (ஒ-3)

# கல்வயலில்

தென்மராட்சி, பெப். 16
நேற்றுக் காலை 10.45 மணியளவில் சாவகச்சேரி கல்வயலில் கடை ஒன்றில் பொருள்கள் வாங்க 'கியூவில்' நின்ற பொதுமக்கள் மீது ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. பொதுமக்கள் நாலாபுறமும் சிதறி ஓடித் தப்பிக்கொண்டார். (ஒ-117)

# 2 படையினர் படுகாயம்

கொழும்பு, பெப். 16
கிழக்கு மாகாணம், கொக்கட்டிச்சோலையில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் ஆயுதப்படையினர் இருவர் படுகாயமடைந்தனர். (ஒ-எ)

# கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 16
தமிழீழ வளங்களைக் கொண்டு நீர்இறைக்கும் சாதனங்கள், போக்குவரத்து இயந்திரங்கள் போன்றவற்றை உருவாக்கக் கூடிய தகுதியான ஆலோசனைகளை வழங்கக் கூடியவர்களுக்கான கூட்டம் ஒன்று, நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

தொழில் நுட்ப, பொறியியல் துறையில் அனுபவம் மற்றும் இவ்விடயத்தில் ஆர்வமுடையோர் ஆகியோரையும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி தமிழீழ ஆய்வு நிறுவனம் கேட்டுள்ளது. (ஒ)

# கச்சதீவு திருநாளும் ரத்து

குருநகர், பெப். 16
சரித்திரப் பிரசித்திபெற்ற பழைமைதீவு, கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருநாட்கள் இம் முறையும் ரத்துச்செய்யப்பட்டிருப்பதாக யாழ். ஆயர் மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தெரிவித்தார். (ஒ-51)

# இன்று

யாழ்ப்பாணம், பெப். 16
யாழ் சென் ஜோன் அம்புலன்சின் நல்லூர் படை அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட முதலுதவிப் படை அங்கத்தவர்களுக்கான கூட்டம், இன்று மாலை 4 மணியளவில் நல்லூர் மங்கையற்கரசி வித்தி[illegible] (ஒ-5)

# யுத்தம் நடத்துவதை அரசு விரும்பவில்லை!

## மட்டக்களப்பில் பிரேமா

கொழும்பு, பெப். 16
எந்தக் கட்டத்திலும் யுத்தம் ஒன்றை நடத்துவதை அரசு விரும்பவில்லை. ஆயுதங்களிலும், வெடி மருந்துகளிலும் அரசுக்கு நம்பிக்கை இல்லை.

★ யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் அப்பாவி மக்களே.

★ அமைதி விரைவில் ஏற்படின், அவசரகாலச் சட்டம் நீக்கப்படும்.

— இவ்வாறு கூறியிருக்கிறார் ஜனாதிபதி பிரேமதாஸா.

நேற்று மட்டக்களப்பு நகர மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

விடுதலைப் புலிகள் அரசுடன் பேச்சுக்கள் நடத்த விரும்பினால், அவர்கள் ஆயுதங்களைக் கைவிட்டு ஏனைய இயக்கங்களுடன் சேர்ந்து பேச்சுக்களை நடத்த முன்வர வேண்டும் — என்றும் அவர் சொன்னார். (உ-எ-5)

# பொம்மர் குண்டு வீச்சு

தென்மராட்சி, பெப். 16
நேற்று முன்தினம் நண்பகல் ஒரு மணிக்கு இரண்டு பொம்மர்கள் இயக்கச்சி, மற்றும் மருதங்கேணிப் பகுதிகளில் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின. (ஒ-117)

# அனைத்துக் கட்சிக் கூட்டம் இன்று கொழும்பில் நடக்கும்

கொழும்பு, பெப். 16
இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாஸா கூட்டியுள்ள அனைத்துக் கட்சிக் கூட்டம் இன்று கொழும்பில் நடைபெறவிருக்கின்றது.

முஸ்லிம், தமிழ் குழுக்கள் கூட்டாக சமர்ப்பித்துள்ள யோசனைகள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்படும் என்றும்—

இனப் பிரச்சினை தொடர்பாக அரச தரப்பின் முக்கிய முடிவுகள் சிலவற்றை ஜனாதிபதி பிரேமதாஸா இந்தக் கூட்டத்தில் வெளியிடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

# பல தரப்பு....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
"அறிவிப்பை மிகக் கவனமாக பரிசீலனை செய்ய வேண்டும்" என ஐ. நா. பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலர் நியூயோர்க்கில் தெரிவித்தார்.

"ஈராக்கின் அறிவிப்பு சமாதானத்திற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. ஈராக்கின் அழிவை விரும்புபவர்களே இந்த அறிவிப்பை நிராகரிப்பார்கள்" — என்று பலஸ்தீன விடுதலை இயக்கம் தெரிவித்துள்ளது.

"குவைத்திலிருந்து ஈராக் படைகள் வெளியேறுவது சம்பந்தமாகத் திட்டவட்டமான கால அட்டவணை அறிவிக்கப்பட வேண்டும்" என பிரானின் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

ஈராக்கின் அறிவிப்பை இந்தியா வரவேற்றிருக்கிறது.

# குவைத்தில் இருந்து...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று விடுத்த அறிவிப்பை பக்தாத் வானொலி ஒலிபரப்பியது.

வளைகுடா நெருக்கடியை சமாதான முறையில் தீர்ப்பதற்கு ஐ. நா. பாதுகாப்புச் சபையின் 660 ஆம் இலக்கத் தீர்மானத்தின் அடிப்படையில் பேச்சுக்கள் நடத்த ஈராக் தயாராக இருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

வளைகுடா நெருக்கடிக்கு பெருமைமிக்கதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு ஐ. நா. பாதுகாப்புச் சபையின் 660 ஆம் இலக்க தீர்மானத்தை ஏற்றுக்கொள்வது என்று ஈராக்கிய புரட்சிக் கவுன்சில் தீர்மானித்துள்ளது.

புரட்சிக் கவுன்சிலின் இந்த விருப்பத்தை ஈராக்கின் உத்தரவாதமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

குவைத்தில் இருந்து ஈராக்கிய படைகள் விலக்கிக் கொள்ளப்படும். ஆனால் அதற்கு சில நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

★ வளைகுடாவில் உள்ள மன்னாரட்டுப் படைகள் வாபஸ் பெறப்பட வேண்டும்.

★ கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் இருந்து இஸ்ரவேல் தனது படைகளை விலக்கிக்கொள்ள வேண்டும்.

★ லெபனானில் சிரியாவின் தலையீடு நிறுத்தப்பட வேண்டும்.

★ குவைத் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து ஈராக்குக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட சகல ஐ. நா. பாதுகாப்புச் சபை தீர்மானங்களும் (பொருளாதாரத்தடை உட்பட) செல்லுபடியற்றதாக்கப்பட வேண்டும்.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கூ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### முன்வினைக்கு முற்காப்பா?

தென்னிலங்கையில் ஊர்வலங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. தென்பகுதித் தாய்மாரின் இம்மாதம் பத்தொன்பதாம் திகதி நுகேகொடையில் நடத்த உத்தேசித்துள்ள பொதுக் கூட்டத்தை முன்விட்டே ஆட்சி இந்த முற்காப்பு நடவடிக்கை!

அரசும் அதனைச் சார்ந்தவர்களும் அதிகாரத் தனத்துடனும், பழிவாங்கும் நோக்குடனும் அட்டூழியங்கள் புரிந்தால் அவற்றைக் கண்டித்து, எதிர்த்து, ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம், ஊர்வலம், கூட்டம் என்பவற்றை நடத்துவதற்கு மக்களுக்கு உரிமை உண்டு. அவை சனநாயகக் கட்டுக்கோப்புக்குள் அடங்கும் அடிப்படை உரிமைகள்.

அந்த உரிமைகளைப் பறித்து மக்களின் எழுத்து, பேச்சு, கருத்து, கூடும் சுதந்திரங்களுக்குத் தடை விதிப்பது அராஜகம். அதுவும் மனித உரிமைகள் மீறப்பட்டதைக் கண்டித்து ஊர்வலம் செல்வதையும், ஆர்ப்பாட்டம் நடத்துவதையும் தடை செய்வது அதிகாரத் திமிர்.

தகுந்த எந்தக் காரணமுமின்றி, அப்பாவிகளை, நிராயுதபாணிகளை, அரசுக்கு எதிரானவர்கள் என்ற ஒரே ஒரு காரணத்துக்காகக் காணாமற் போகச் செய்தபோது, அந்தத் திட்டத்தை வகுத்திட்டபோது இப்படி எதிர்ப்பும், கண்டனமும், ஆர்ப்பாட்டமும் கிளம்பும் என்று அரசாங்கம் உணரத் தவறியது ஏனோ?

அக்கிரமமும், அட்டூழியமும், அதர்மமும் கட்டவிழ்த்துவிடப்பட்ட காலத்தில் அவற்றைச் செய்தவரையே அவை மீண்டும் வந்து வருத்தும் என்ற இதய உண்மை அரசுக்கு அப்போது புரிந்திருக்கவில்லை.

அரச எதிர்ப்பாளர்கள் என்பதற்காக சுமார் 60,000 மக்கள் தெற்கில் 1989 இல் கொலை செய்யப்பட்டார்கள் (காணாமற் போனவர் என்ற கணிப்புடன்) என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாறு கொலையுண்டவர்களின் தாய்மார், மனைவியர், சகோதரிகள் சேர்ந்ததே தெற்கின் அன்னையர் முன்னணி. அந்த அன்னையரின் சக்திக்கு, அவர்களின் நடவடிக்கையில் இருக்கும் சூட்டுக்கே அரசு நடுநடுங்குவதையே தடை உத்தரவு எடுத்துக் காட்டுகிறது.

தெற்கில் மனித உரிமைகள் மீறப்படுவதற்குப் பல வருடங்களுக்கு முன்னரே வடக்கு-கிழக்கில் அந்த அதர்மம் தலைதூக்கியது. இன்னமும் அது தொடர்கிறது. கூடிய பரிகாரத்துடன் குண்டு வீச்சினை [illegible] கொலை செய்தல், உணவுப்பொருள் அனுப்பாமல் பட்டினி போடுதல், மருந்து கொண்டு செல்ல அனுமதிக்காமல் நோயாளரைக் கொல்லுதல், தொழில், கல்வி உரிமைகள் தடுப்பு என்று எண்ணிலடங்கா மனித உரிமைகள் தமிழ்ப் பகுதிகளில் மீறப்படுகின்றன.

இவற்றுக்கும் ஒரு நாள் அரசு பதில் சொல்லியே ஆக வேண்டிவரும். இப்போது அது விதைக்கும் வினை மீண்டும் அதனையே திருப்பித் தாக்கும்.

# வடக்கு - கிழக்கிற்கு போதிய உணவு அனுப்பப்படுவதில்லை

## சுவீடிஷ் தூதுவர் கருத்து அதிகாரிகள் கூற்றுக்கு மறுப்பு

கொழும்பு, பெப். 16

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு போதிய உணவு, மருந்துப் பொருட்கள் அனுப்பப்படுவதில்லை.

கடந்த வாரம் கொழும்பில் கொள்கை வகுத்தல், திட்டமிடல் அமைச்சு கூட்டிய உதவி வழங்கும் நாடுகளுக்கான கூட்டத்தில் சுவீடிஷ் தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்கு உதவி வழங்கும், வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிவாரணம் வழங்கல் தொடர்பாக மாதா மாதம் இந்த அமைச்சில் கூட்டம் நடைபெறுவது வழக்கம்.

இந்தக் கூட்டத்தில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் தூதுவர்கள், வெளிநாட்டு ராஜதந்திரிகள் கலந்து கொண்டனர்—

இதே வகையில் கடந்த வாரம் நடைபெற்ற கூட்டத்தில் தமிழர் மீதான குண்டு வீச்சு நிவாரண விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன.

பொதுமக்கள் மீது குண்டு வீச்சு நடைபெறவில்லை. போதிய உணவு, மருந்து வகைகள் அனுப்பப்படுகிறது என்று அரச அதிகாரிகள் அக்கூட்டத்தில் கருத்து வெளியிட்டனர்.

இதனை மறுத்த இலங்கைக்கான சுவீடிஷ் தூதுவர், மீறிக்கிடைத்த தகவல்கள் தம்மிடம் இருப்பதாகக் கூறி அரசின் கூற்றை மறுத்தார். (இ-3)

### பாதயாத்திரை

தென்மராட்சி, பெப். 16

வல்லிபுர ஆழ்வார் கோவில் தேர் உற்சவத்தையிட்டு சாவகச்சேரி திவ்விய ஜீவன சங்கம் வருடாந்த பாதயாத்திரை நடத்த உள்ளது.

ஆத்மஜோதி நா. முத்தையா தலைமையில் எதிர்வரும் 24 ஆம் திகதி சாவகச்சேரி வாரிவனநாதர் ஆலயத்தில் இருந்து பாதயாத்திரை புறப்படும். (இ-117)

## சிறுத்தீவு திருநாள் ரத்து

குருநகர், பெப். 16

நாளை 17 ஆம் திகதி நடைபெற இருந்த சிறுத்தீவு சர்ச் [illegible] வருடாந்தக் கொண்டாட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

குருநகர், புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வண. பி. எம். இம்மனுவேல் அடிகளார் இத்தகவலைத் தெரிவித்தார்.

சிறுத்தீவுப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தால் மிதி வெடிகள் வைக்கப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுவதால் பாதுகாப்பின் நிமித்தம் இம்முறை திருநாள் கொண்டாட்டம் நிறுத்தப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-61)

## யுத்தநிறுத்தப் பேச்சுக்கே இடமில்லை என்கிறார் குயிலர்

ஐ. நா. பெப். 16

குவைத்தில் இருந்து தமது படைகள் வாபஸ் வாங்கப்படும் என்ற திட்டவட்டமான அறிவிப்பை ஈராக் வெளியிடும் வரை வளைகுடாப் போரில் யுத்த நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

இப்படி ஐ. நா. பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலர் நேற்றுச் சொன்னார்.

ஐ. நா. பாதுகாப்புச் சபைத் தீர்மானங்களை அமுல் நடத்துவதில் ஈடுபட்டுள்ள நாடுகளைத் திருப்திப்படுத்துவதற்கு ஈராக் முதலில் தமது படைகளை குவைத்தில் இருந்து விலகுவதாக அறிவிக்க வேண்டும் என்றும் ஐ. நா. பொதுச் செயலாளர் சொன்னார்.

## தாக்குதலுக்கு உள்ளான 'பங்கர்' இராணுவ இலக்காம்

★ பக்தாத் நகரில் கடந்த புதன்கிழமை அமெரிக்கப் போர் விமானங்கள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தி அழித்த பங்கர் ஓர் இராணுவ இலக்குதான் என்று பிரிட்டிஷ் பிரதமர் மேஜருக்கு அமெரிக்க ஜனாதிபதி புஷ் வலியுறுத்திக் கூறினார்.

அத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக திரு. மேஜர் திரு புஷ்ஷுடன் தொலைபேசி மூலம் உரையாடிய போது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஈராக் கடும் கண்டனம்

ஐ. நா. பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலர் மீதான தனிப்பட்ட தாக்குதலை ஈராக் நேற்று மீண்டும் நிகழ்த்தியது.

தார்மீக மற்றும் சட்டரீதியாக பொதுச் செயலாளர் பதவியை வகிக்கத் தகுதியற்றவர் திரு குயிலர் என்று ஈராக் அரச நாளேடு கண்டன அறிக்கையில் குறிப்பிட்டது.

## யுத்தத்தை முன்னிட்டு விசேட அலவன்ஸ்!

### சவூதியில் பணிபுரியும் ஊழியருக்கு

யாழ்ப்பாணம், பெப். 16

சவூதி அரேபியாவில் தொழில் புரியும் வெளிநாட்டவர்களுக்குப் போதிய பாதுகாப்பும் ஏனைய அன்றாட அடிப்படை வசதிகளையும் செய்து கொடுப்பதில் அங்குள்ள நிறுவனங்கள் மிகவும் கவனமாகவும் முன்னெச்சரிக்கையாகவும் நடந்து வருகின்றன.

வளைகுடா யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னரே அவை வெளிநாடுகளைச் சேர்ந்த ஊழியர்களுக்குப் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன.

யுத்தம் தொடங்கிய பின்னர் பாதுகாப்பு மற்றும் வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் யாவும் தங்கள் ஊழியர்களுக்கு வாயு மற்றும் இரசாயன ஆயுதங்களில் இருந்து காப்பாற்றும் முகமூடிகளை வழங்கி உள்ளன.

மற்றும் சில நிறுவனங்கள் யுத்தத்தை முன்னிட்டு விசேட ஊக்குவிப்பு அலவன்ஸ் கூட வழங்குகின்றன.

இந்த நெருக்கடியான வேளையிலும் தொடர்ந்து பணி புரியும் ஊழியருக்கு, யுத்தத்தினால் அவசர நடவடிக்கை தேவைப்படும் பட்சத்தில் தகுந்த பாதுகாப்பு அளிக்க சகல ஏற்பாடுகளும் செய்ய உறுதி வழங்குவதாகவும் பல நிறுவனங்கள் ஊழியர்களுக்குத் தனித்தனியாகக் கடிதங்கள் வழங்கி உள்ளன.

அதன் விளைவாகப் பல வெளிநாட்டுத் தொழிலாளர்கள் அச்சமின்றி அங்கு தொடர்ந்தும் பணியாற்றி வருவதாகவும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலரும் தங்கள் உறவினருக்குக் கடிதம் எழுதியுள்ளனர். (அ)

# ஆஸ்திரேலிய பல்கலைக்கழகங்களில் சேர்ந்து படிக்க புலமைப் பரிசில்

கொழும்பு, பெப் 16

ஆஸ்திரேலியப் பல்கலைக் கழகங்களில் சேர்ந்து படிப்பதற்கு இலங்கையைச் சேர்ந்த 40 மாணவர்களுக்கு ஆஸ்திரேலிய அரசாங்கம் புலமைப்பரிசில் வழங்குகிறது.

1992 ஜனவரி 1 ஆம் திகதி 18 வயதுக்கும், 23 வயதுக்கும் உட்பட்டவர்கள், தேவையான கல்வித் தகைமைகள் இருந்தால் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என்று கொழும்பில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகம் அறிவித்துள்ளது.

விண்ணப்ப முடிவுத் திகதி அடுத்தமாதம் அதாவது [illegible] இருக்கும்.

புலமைப்பரிசில்கள் இரண்டு பிரிவுகளாக வழங்கப்படுகின்றன. ஒன்று திறமை அடிப்படையிலானது. மற்றது வசதி குறைந்தோருக்கான சலுகை அடிப்படையிலானது.

திறமை அடிப்படையிலான புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிப்போர் ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் ஆகக் குறைந்தது 2'ஏ' 2'பி' எடுத்திருக்கவேண்டும். அல்லது இதற்குச் சமனான தராதரத்தை (குறைந்தது 280 புள்ளிகள்) பெற்றிருக்கவேண்டும்.

சலுகை அடிப்படையிலான புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிப்போர் ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் குறைந்தது 4'பி' பெற்றிருக்க வேண்டும். அல்லது இதற்குச் சமனான தராதரத்தை (குறைந்தது 260 புள்ளிகள்) பெற்றிருக்க வேண்டும். அத்துடன் இப்பிரிவில் விண்ணப்பிப்போரில் ஜனசக்தி உதவி பெறுவோர், உணவு முத்திரை பெறுவோர், குறைந்த வருமானம் பெறுவோரின் விண்ணப்பங்கள் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எம்மிடம் உயர்ந்த ரக வெண்டி, புடோல், மிளகாய், கீரை விதைகள் பக்கற் ரூபா 7/- வீட்டுத் தோட்டம், பாடசாலைக்கு உகந்தது. கன்றுகளும், விவசாயக் கொப்பிகளும் விற்பனைக்குண்டு. மலர் ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (15849)

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் 4 பரப்பும் 6 குழியுடன் வீடும், நீர்வேலியில் தென்னை மரங்கள் கொண்ட 6 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. சி. கனகரத்தினம், 465/1 K. K. S. வீதி, யாழ்ப்பாணம். (15851)

சாயிபாபாவின் அழகிய வர்ண ஸ்ரிக்கேர்ஸ் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 266/1, காங்கேசன்துறை வீதியில் உள்ள ஸ்ரீ சாயிராம் புத்தகசாலையில் தொடர்பு கொள்ளவும். மின்னா பியூஷன் சென்ரர் அருகாமை. (15763)

### லிகிதர் பரீட்சை

யாழ். பல்கலைக் கழக லிகிதர் பரீட்சைக்குரிய பொது உளச்சார்பு நூல் [I.Q] எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் விற்பனையாகிறது. விலை 50/- ஆக்கியோன் க. குணராசா M.A) (15852)

### வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள், கொப்பிப் பேப்பர், இமெற்று கோழித்தீன் உறை, பித்தளை செம்பு, போத்தல் என்பன வாங்கப்படும் விற்கப்படும். சோதிநிசா Second Hand Book House 57, ஸ்ரான்லி வீதி, இலங்கை வங்கிக்கு முன்னால், யாழ்ப்பாணம். (15711)

### ரைப்பிங் வகுப்புகள்

தமிழ் - ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புகள் நடைபெறுகின்றன. மற்றும் தமிழ் - ஆங்கிலம் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். FUDO:- 89/17, மின்சார நிலைய வீதி, 6 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். கிளை: பிரதான வீதி, மாவிட்டபுரம். (C/5745)

### WANTED

M.B.B.S Doctor for a Private Hospital in Jaffna. Apply Immediately to the Medical Officer In Charge Central Nursing Home 350, Palaly Road, Thirunelvely. (15845)

### வாங்கப்படும்

பிக்கவைத் திரவ சவர்க்கார வெற்று கானப்போத்தல் ரூ. 1 00 வீதம் வாங்கப்படும். பிக்கவைத் - யாழ்ப்பாணம். (இ/5769)

### வகுப்புகள்

Shorthand & Typing, Book-Keeping & Accounts புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன. பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும். School of Business Administration, 16, 3rd Cross Street. Jaffna. (சி/5763)

### போட்டோஸ்ரற்

போட்டோஸ்ரற் பிரதிகளையும், றோணியோ பிரதிகளையும் தமிழ், ஆங்கில ரைப்பிங் வேலைகளையும் உடனடியாகப் பெற்றுக் கொள்ள கிளிக்கஸ் 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (14608)

### "இருள் இரவில் அல்ல"

மீரா வெளியீடு செம்பியன் செல்வன் திருச்செந்திநாதன் எழுதியது எந்த ஒரு பெண்ணும் இளம் வயதில் கணவனை இழக்கக் கூடாது இதுதான் புதிய அனுபவத்தினை தருகிறது. இலங்கை வல தர்க்கா ஸ்ரேசனேர்ஸ் கன்னாதிட்டி, திருக்கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீகாந்த புத்தகசாலை, நல்லூர். (15826)

### தட்டச்சு இயந்திரம்

சகலவிதமான தட்டச்சு இயந்திரங்களும் திருத்திக் கொடுக்கப்படும். உதிரிப் பாகங்களும் மாற்றிக் கொடுக்கப்படும் றொக்குட் அன் கொம்பனி 8/1, அம்மன் வீதி சந்தைமடம், யாழ்ப்பாணம். (15838)

### MAKE-UP CLASSES

Basic Make up and Hair-Dressing Classes மிக விரைவில் ஆரம்பமாகவுள்ளது. வெளிநாடு செல்லும் பெண்களுக்கும், பயன்பெறக் கூடிய வகையில் மிகவும் குறுகிய காலத்தில் கற்பிக்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். Yogi Beauty Parlour, 71, Nayanmar Veethy - (off Kachcheri Nallur Road) Jaffna. (15855)

### தவறிவிட்டது

சுவிகாமபிள்ளை - புவனேஸ்வரன் 652151523 V இலக்க அடையாள அட்டை 31-01-91 அன்று கோண்டாவிலுக்கும், சண்டிலிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் பணிமனையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (15854)

### மணமக்கள் தேவை

யாழ். இந்து 33 வயது எக்கவுண்டனுக்கும், 26, 35 வயதுப் பெண்களுக்கும் தேவை. எம்மிடம் மணமக்கள் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (15848)

ஆசிரியர் விஞ்ஞானம் வயது 30 நட்சத்திரம் கேட்டை எண் 5 இராகு பாவமில்லை தோற்றம் நடுத்தரமான உயரமும், சிவந்த நிறமும் உடையவர். இவருக்கேற்ற அமைவுடன் அழகும், நற்பண்புமுள்ள தகுதியான ஆசிரிய மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். ஜாதக மற்றும் விபரங்களுடன் தொடர்பு: 31 - 3 - 91 வரை ஏற்றுக் கொள்ளப்படும். விளம்பரதாரர், C/o இன்சம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (15842)

### தவறிவிட்டது

சந்திரையா இன்னத்தம்பி, மனோகரன் வசந்தாதேவி என்போரது திருமண அட்டையும், குடும்ப அட்டைகளும் திருநெல்வேலி கிராமிய வங்கிப் புத்தகமும், நாகலிங்கம் சின்னம் என்பவருடைய அடையாள அட்டையும் மற்றும் சான்றிதழ்களும் கொண்ட கடதாசி உறை நல்லூர் கந்தசுவாமி கோவிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (15856)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்,
இலங்கை.

## விஞ்ஞானபீட முதலாவது அரையாண்டுப் பரீட்சைகள் - 1990

1990 ஆம் ஆண்டுக்குரிய முதலாவது அரையாண்டுப் பரீட்சை 22-04-1991 இல் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் 05-03-1991 இற்கு முன்பாக யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளைக்கு விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மேலதிக விவரங்களைப் பரீட்சைக் கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து நேரடியாகவோ அல்லது சுய விலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ. மீ X 10 செ. மீ. அளவுடைய கடிதவுறையை அனுப்பியோ பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்

(இ-5766)

# பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் தேவஸ்தானம்

"திருட்டுத்தனமும் விஷமத்தனமும் நிறைந்த சில போலியான நபர்கள் மேற்படி தேவஸ்தானத்தின் பெயரைச் சொல்லி நேர்த்தி, யாகம், திருப்பணி என்ற பெயர்களில் பல இடங்களில் மக்களை ஏமாற்றிப் பணம் பறிப்பதாக அடியார்கள் பலர் எங்களுக்குப் புகார் செய்துள்ளார்கள்.

இப்படியான நபர்கள் உங்கள் வீடுகளுக்கு வரும் போது அவர்களை இனம்கண்டு அம்பலப்படுத்தித் தகுந்த முறையில் அவர்களது வேஷத்தைக் களைந்துத் தண்டனை கொடுக்குமாறு கண்ணன் அடியார்களை மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

பரிபாலனசபை தொடங்கிய நாள் தொட்டு, கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக, ஆலயத்திற்கு நேரில் வருகை தந்து அடியார்கள் செலுத்தும் திருப்பணி நிதி, காணிக்கை என்பவற்றைக்கொண்டே ஆலயத் திருப்பணி முதலிய வேலைகள் அனைத்தும் நடைபெற்று வருகின்றன.

பெற்றுக்கொள்ளும் பணம், பொருள், காணிக்கை என்பனவற்றுக்கு உடனுக்குடன் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு வருகிறது. இப்படி நிதி அளித்தோரின் பெயர்கள் அனைத்தும் ஆண்டுதோறும் வெளியிடப்படும் நிதி அறிக்கைப் புத்தகங்களில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன.

எனவே—

அடியார்கள் அனைவரையும், போலியான இப்படிப்பட்ட மனிதர்கள் விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கும்படி மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

பரிபாலனசபை உறுப்பினர்களோ அல்லது கோயில் பூசகர்களோ ஆலயத்திலன்றி வேறு எந்த இடத்திலும் நிதி சேகரிக்கச் செல்வது இல்லை என்பதை அடியார்கள் அனைவருக்கும் நினைவூட்டுகிறோம்."

சி. கபிலைநாதன்
தலைவர்
பரிபாலன சபை.

(இ/5760)

## 6ஆவது உதய நிறைவு நாள்



உதயம்:
16 - 02 - 1985

மறைவு:
01 - 06 - 1989

செல்வன்

## ஸ்ரீரஞ்சன் பிரேமகீதன்

ஆண்டுக்கு ஒரு முறைதான் பிறப்பு என்ற அழகான நினைவு வரும் பெற்றவர்க்கு இன்று தான் உன் பிறப்பு கண் மகனே! பிரேமகீதன் நீ பிறக்காத நாளில்லை எம் நினைவில் கணந்தோறும் உன்னை நாம் நினைக்கின்றோம். கலங்கிடும் கண்ணீரால் எம்மை நாம் நினைக்கிறோம்.

உன் இழப்பை நினைந்துருகும்
உனது அன்பு அப்பா, அம்மா, தங்கை, மற்றும் அம்மப்பா, அம்மம்மா, பாலா மாமா, சேகர் மாமா, பாப்பா இத்தி.

75 (புதிய இல: 109),
அரசடி றோட், யாழ்ப்பாணம். (15828)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 328/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16 - 02 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org